**புத்தளம் பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தளம் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான புத்தளம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பலை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் வருமானம் மீளாயடவாணடின் வருமானத்தில் ரூபா 345,000 ஆன உறுப்புரிமை படிகளில் உள்ளடக்கியமையால் மேலதியமாக பதியப்பட்டிருந்தது. | நாளேட்டு பதிவுகளால் திருத்துவதற்கு நடவடிக்கை எடுகப்கப்படும். | நாளேட்டு பதிவுகள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுகப்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலீச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நி.பி. 104(1) (3) (4) | 2022 ஆம் ஆண்டில் தவறவிடப்பட்ட முந்தல் நூலகத்தின் கணனி இயந்திரம் தொடர்பில் நி.பி. இன் பிரகாரம் விசாரணை நடாத்தப் பட்டிருக்கவில்லை. | விசாரணைகள் நடைபெறுகின்றன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நி.பி.571(2) | ரூபா 692,356 பெறுமதியான 54 வைப்புகள் தொடர்பில் நி.பி இன் பிரகாரம் முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்பாரத வைப்புகள் முறைப்படி சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) நி.பி. 1647 (அ), (ஆ) மற்றும் (இ) | வாகன உபகரணங்கள் மற்றும் உபபாகங்களின் பாதுகாப்பு தொடர்பில் மாற்றங்கள் செய்யப்பட்டமையால் சம்பவ குறிப்பு புத்தகத்தில் எவ்வித பதிவும் செய்யப் பட்டிருக்காததுடன் வாகன உபகரணங்கள் மற்றும் உபபாகங்களின கணிப்பீட்டு சபையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. வாகனங்கள் தொடர்பில் வாடிக்கையாளர் பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சம்பவ குறிப்பு புத்தம் நாளது வரையாக்கவும் கணிப்பீட்டு சபை நடாத்துவதற்கும் வாடிக்கையாளர் பொருட் பதிவேடு பேணுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் பிரிவு 128 | உள்ளுராட்சி சபையால் பயன்படுத்தப்பட்ட 142 ஆதனங்கள் தொடர்பில் சபையின் உரிமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் மாற்றுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் விதி இல. 5(3) and 5(6) | வருமான சேகரிப்பு மற்றும் கேரிக்கப் பட்டிருக்காத சகல வருமான மற்றும் பெறவேண்டிய ஏனைய கட்டணங்கள் தொடர்பில் போதிய உள்ளக கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடாமாடும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் மூலம் ஒழுங்கமைத்து சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 48,731,639 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 37,503,587 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 3,736 | 3,150 | 2,254 | 2,582 | 3,536 | 3,267 | 2,693 | 2,394 |
| வாடகை | 18,800 | 18,016 | 13,348 | 9,494 | 17,800 | 18,874 | 14,091 | 6,136 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 2,855 | 1,997 | 1,997 | - | 2,901 | 1,663 | 1,663 | - |
| ஏனைய வருமானம் | 22,995 | 6,099 | 6,099 | - | 3,050 | 1,802 | 1,802 | - |
| மொத்தம் | 48,386 | 29,262 | 23,698 | 12,076 | 27,287 | 25,606 | 20,249 | 8,530 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **செயலாளரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,682,457 தொகையான மதிப்பீட்டு வரி நிலுவைகள், ரூபா 899,317 தொகையான ஏக்கர் வரிகள் மற்றும் ரூபா 9,494,287 தொகையான வாடகை நிலுவைகள் என்பன அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைகளை வருமானங்களை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி என்பன முறையே ரூபா 26,016,708 மற்றும் ரூபா 39,657,497 என்பன மாகாண சபை பிதம செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளிற்காக பணம் மற்றும் முத்திரை வரி என்பவற்றின் நிலுவை விரைவாக அறவிடுவதற்கு உரிய நிறுவனங்களிற்கு எழுத்துமூல நினைவூட்டல்கள் வழங்கப்பட்டிருந்தது. | நீதி மன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை வரி என்பவற்றின் நிலுவை விரைவாக அறவிடுவதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 144 கைத்தொழில்களின் சுற்றாடல் அனுமதி பத்திரத்தின் உத்தரவாத காலப்பகுதி 2012 செப்தெம்பர் 30 இல் காலாவதியாகி இருந்ததுடன் சபையானது புதிய அனுமதிப் பத்திரங்களை பெறுவதற’கு | பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவறியாமையால் ரூபா 180,000 ஆன வருமானத்தை இழந்திருந்தது. | | |
| (ஈ) | 1990 இன் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் நியதியின் 21(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கழிவு பரிசோதனை / கழிவகற்றல் என்பவற்றிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதியின் பொது நிபந்தகைளின் பிரகாரம் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் அனுமதிப்பத்திரம் காலாவதியாவதற்கு ஒருமாதம் முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த நியதி பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிப்பதற்காக நெறிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பததிரத்தின் பொது நிபந்தனை மற்றும் நயதிகளின் பிரகாரம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பதில் கடமையிலுள்ள வருமான பரிசொதகர் பொறுப்பிலிருந்து 288 ஆம் இலக்க பற்றுச்சீட்டு புத்தகம் காணாமல் பொனமையால் அதன் 14357 இலிருந்து 14400 வரையான பற்றுச் சீட்டுக்களிலிருந்து எவ்வித தொகையும் சபைக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2022 திசெம்பரில் திரும்பவும் பற்றுச்சீட்டு புத்தகங்கள் அவருக்கு கையளிக்கப் பட்டிருந்ததுடன் அந்த பற்றுச்சீட்டு புத்தகத்தின் 12738 இன் கடைசி பிரதி மற்றும் 12739 இன் மூலப் பிரதி காணாமல் போனவை தொடர்பில் விசாரணை நடாத்தாமல் திரும்பவும் வருமான செகரிப்ப நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | சொல்லப்பட்ட உத்தியோகத்தர் அவரிடமிருந்து பற்றுச்சீட்டு புத்தகத்தை பெறுவதற்கு் நிலுவையாக இருக்கின்ற வருமானங்களை அறவிடுவதற்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகர்தர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (ஆ) | 43 விடயங்கள் தொடர்புபட்ட 221 அலகு பொருட்கள் ஆவணப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட்கள் ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 30,233,353 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 21,134,729 ஆகும். | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைகளை அறவிட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய | விசாரணைகளின் பின்னர் கொடுப்பனவுகள் செய்யப்படும். | கடன்கொடுத்தோரிடமிருந்து அறவிட உடனடியாக |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளின் பெறுமதி ரூபா 10,687,453 ஆக இருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | புதிய கடைத் தொகுதியில் கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான குத்தகை உடன்படிக்கை பிரகாரம் உப குத்தகைக்கு விட்டமையால் உடன்படிக்கை இரத்து செய்யப்பட்ட போதும் குத்தகையாளர் 03 மற்றும் 04 ஆம் இலக்க கடைகளை குத்தகைக்கு விட்டிருந்தார். | எதிர்காரத்தில் உடன்படிக்கை இரத்துசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொட்டுவாவ வீதியில் கடைகளின் குத்தகைக்கான குத்தகை உடன்படிக்கையின் 07 ஆவது உட்பிரிவின் பிரகாரம், உரிய உடன்படிக்கையை நீக்குவதற்கு முதலாவது நபர் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தார் என இரண்டாவது நபர் தெரியப்படுத்தி போதிலும் 2022 சனவரியிலிருந்து கொழும்பு வீதியில் 48 முதல் 54 வரையான இலக்கமுடைய கடையிலிருந்து 07 கடைகள் மற்றும் தொட்டுவாவ வீதியில் 20 முதல் 39 வரையான இலக்கமுடைய கடைகளிலிரந்து 20 கடைகள் 2022 ஏப்ரல் மாதத்திலிருந்து வாடகை செலுத்தி யிருக்காததுடன் ஒப்பந்தத்தை கைச்சாத்திடாமல் வியாபாரத்தை தொடருகின்றன. | உள்ளுராட்சி ஆணையாளரிடமிருந்து அறிவுறுத்தல்கள் பெறப்பட்டிருந்தால் இதன்படி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை கைசசாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தொட்டுவாவ வீதியில் இருக்கின்ற 17 ஆம் இலக்க கடை 04 ஆண்டு காலமாக வாடகை அடிப்படையில் 1988 ஒக்தோபர் 07 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2002 ஆம் ஆண்டில் தகராறு காரணமாக குத்தகையாளர் சபைக்கு எதிராக வழக்கு தொடுத்திருந்தார். வழக்காடும் தினத்தில் சபை பிரதிநிதி வருகை தராமையால் குத்தகையாளருக்கு சாதகமாக தீர்ப்பபு வழங்கப்பட்டிருந்தது. இந்த குத்தகையாளர் தற்போது அனுமதியில்ாமல் கடையில் தங்கியிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் ரூபா 54,021 ஆன தொகை செலுத்த வெண்டியிருந்தது. திரும்பவும் சபை சிவில் வழக்கு தொடுப்பதற்கு ரூபா 150,000 செலவழித்திருந்தது. | சகல ஆவணங்களும் சட்டத்தரணிக்கு வழங்க்கப்பட்டிருந்தது. | நிலுவைாக இருக்கின்ற பணத்தொகையை அறவிடுவதற்கோ அல்லது தேவையானதை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையினுடைய அதிகார எல்லக்குள் வராந்த சந்தைகள், நூலகங்கள், ஆரம்ப பாடசாலைகள், பொதுக் குழாய் கிணறுகள் சுடுகாடுகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் உள்ளடங்கிய 138 கோரப்படாத ஆதனங்கள் இருந்தன. மீளாய்வாண்டில் ரூபா 894,106 செலவழித்து கையேற்கப்பட்டிருக்காத ஆதனங்களின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | கையேற்பதற்காக உரிய நிறுவனங்களிற்கு வேண்டுகை விடப்பட்டிருந்தது. | சாத்தியமானளவு விரைவாக சொத்துக்களை கைப்பற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 06 இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 10 ஆரம்ப நிலைப் பதவிகள் வெற்றிடமாக இருந்தது | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நிறுவாங்களிற்கு வேண்டுகை செய்யப்பட்டிருந்து | சபைக்கு தேவையான ஊழியர் எண்ணிக்கை சரியாக இனங்கண்டு அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் வேலையை விட்டுச் சென்றிருந்த, இடைநிறுத்தப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றிருந்த 14 ஊழியர்களிடமிருந்து ரூபா 183,756 ஆன தொகை சேகரிக்கப்பட வேண்டியிருந்தது. | நிலுவை தொகை தொடர்பில் ஊழியர்களிற்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தது. | நிலுவையாக இருக்கின்ற ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான உழவு இயந்திரம் மற்றும் உழவுஇயந்திர பெட்டி 04 ஆண்டுகளிற்கு மேலாக திருத்தப்பட்டு பயன்படுத்தப்படவோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணிப்பீட்டுச் சபை தீர்மானத்தை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 11 வித்தியாசமான பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 658,575 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பாரத்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்திருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டினுடைய பாதீட்டில் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டியதுடன் பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைவதற்கு முயற்சிகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 121 பணிகளிற்கு ரூபா 39,840,000 ஆன தொகை ஒதுக்கப்பட்ட போதிலும் ரூபா 38,270,000 பெறுமதியான 111 பணிகள் திசெம்பர் 31 வரையும் எதிர்பார்க்பபட்ட விளைவுகளை அடையாமல் கைவிடப்பட்டிருந்தது. | பரிந்துரைகளின் அமுலாக்களிலுள்ள தாமதம் காரணமாக உரிய பணிகள் கைவிட வேண்டியிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டியதுடன் பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைவதற்கு முயற்சிகள் செய்யப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவானது ஊழியர் கடன்கள், வருடாந்த கணிப்பீட்டுச் சபை, விடுமுறை மற்றும் வருமானங்களில் மாத்திரமே கவனம் செலுத்தியிருந்தது. | இந்த ஆண்டு திட்டம் தொடர்பில் எங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. | சபையின் சகல நடவடிக்கைகளையும் மேவுவதற்கு போதிய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.3. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையும் நோக்கில் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டதுடன் 10 இலக்குகள் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நோக்கங்கள் மற்றும் இலகுகுகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |